# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## July 25, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தேர்வு முறைகேட்டில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான வரைவு மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

i. வினாத்தாள் கசிவுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் கொண்ட மசோதா நாடாளுமன்றத்தில் திங்கள்கிழமை (ஜூலை 27) தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த சில மணி நேரங்களில், இந்த வரைவு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

ii. இதில், வினாத்தாள் கசிவு முறைகேட்டில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அதிகபட்சமாக ரூ.10 கோடி வரை அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

iii. மழைக்கால நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கிய கடந்த திங்கள்கிழமை, நீட் தேர்வு முறைகேடுகளைக் கண்டித்தும், மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரியும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின்கீழ் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஒன்றுதிரண்டு நாடாளுமன்றம் நோக்கி நடத்திய பேரணியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் மீது காவல் துறையினர் தடியடி நடத்தியதுடன், கண்ணீர் புகை குண்டுகளை வீசி கலைத்தனர். இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஏராளமான போராட்டக்காரர்களும், 100-க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினரும் காயமடைந்தனர். தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி, நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சிகள் தொடர் அமளியில் ஈடுபட்டுள்ளன. இதனால் நாடாளுமன்றம் தொடர்ந்து முடங்கி வருகிறது.

iv. இந்த நிலையில், தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், வினாத்தாள் கசிவு முறைகேட்டில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான வரைவு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

v. முன்னதாக, பொதுத் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பாக கடும் சர்ச்சை எழுந்த நிலையில், மத்திய அரசு கடந்த 2024-ஆம் ஆண்டு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது. அதற்கு முன்பாக, இது போன்ற தேர்வு முறைகேடுகள் அல்லது குற்றங்களைக் கையாள்வதற்கு குறிப்பிட்ட வலுவான சட்டம் எதுவும் இல்லை. 'பொதுத் தேர்வு முறைகேடுக ளைத் தடுக்கும் சட்டம் 2024 என்ற அந்தச் சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்து 4 மாதங்களுக்குப் பிறகு, நீட் மற்றும் நெட் தேர்வு வினாத்தாள்கள் கசிந்ததாகக் கூறப்பட்ட விவகாரத்தில் பெரும் கொந்தளிப்பான சூழல் உருவானதைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அந்தச் சட்டம் அறிவிக்கை செய்யப்பட்டது.

vi. அந்தச் சட்டத்தில் தேர்வு முறைகேடு மோசடிகளைக் கட்டுப்படுத்த, 3 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிப்பதற்கான நடை முறைகள் இடம்பெற்றிருந்தன. மேலும், திட்டமிட்ட தேர்வு முறைகேடு குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு 5 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், குறைந்தபட்சம் ரூ.1 கோடி அபராதம் விதிக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது.

vii. இந்த 2024-ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில், இப்போது சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. இதில், வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேட்டில் ஈடுபடு பவர்களுக்கு தற்போதுள்ள நடைமுறைகளைக் காட்டிலும் கூடுதல் தண்டனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

viii. அதன்படி, 'முறைகேட்டில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தபட்சம் 5 ஆண்டு சிறைத் தண்டனையும், அதி கபட்சமாக 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்படும். மேலும், அதிகபட்சமாக ரூ. 10 கோடி வரை அபராதமும் விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

2. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 10 சதவீத வரியை அமெரிக்கா விதித்தது.

i. அதுபோல, அமெரிக்காவுடன் வர்த்தக உறவை வைத்துள்ள மேலும் 16 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதும் 10 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது.

ii. குறிப்பாக, தொழிலாளர்களைக் கட்டாயம் பணிபுரிய வைத்து

தயாரிக்கப்படும் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை தடுக்கும் வகையில், வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் இந்தியா கடந்த ஜூலை 14-ஆம் தேதி திருத்தங்கள் மேற்கொண்டதை அமெரிக்கா கவனத்தில்கொண்டு, வரி விதிப்பை 10 சதவீதமாக குறைத்து விதித்துள்ளதாக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி (யுஎஸ்டி ஆர்) தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

iii. இந்தியா உள்பட 60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்கா கடந்த பிப்ரவரி 24-ஆம் தேதி மேற்கொண்ட 10 சதவீத தற்காலிக வரி விதிப்பு, வியாழக்கிழமை நள்ளிரவுடன் காலாவதியான நிலையில், இந்தப் புதிய வரி விதிப்பு நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

iv. அதே நேரம்,தொழிலாளர்களை கட்டாயம் பணிபுரிய வைத்து தயாரிக்கும் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படு வதைத் தடுக்க சட்டங்களை இயற்றாத சீனா, பிரிட்டன், ஜப்பான் உள்பட 43 நாடுகள் மீது, யுஎஸ்டிஆர் ஏற்கெனவே பரிந்துரைத்தபடி 12.5 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது.

3. தென் சீனக் கடலில் உள்ள சர்ச்சைக்குரிய ஸ்கார்பரோ பவளப்பாறைப் பகுதியில், பிலிப்பின்ஸ் மீன் வளத் துறையின் 2 ரோந்து கப்பல்கள் மீது சீனக் கடலோரக் காவல் படையினர் சக்திவாய்ந்த நீர் பீரங்கிகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தினர்.

i. நடப்பு வாரத்தில் 2 நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற 3-ஆவது மோதல் சம்பவம் இதுவாகும். இவ்விவகாரத்தில் சீனாவுக்கு கடும் கண்டனத்தைப் பதிவு செய்த பிலிப்பின்ஸ் கடலோரக் காவல் படை, 'ஸ்கார்பரோ பகுதி, எங்களின் பிரத்யேக பொருளாதார மண்டலம் மற்றும் எல்லைப்பகுதி' என்று மீண்டும் வலியுறுத்தியது.

ii. ஆனால், ஸ்கார்பரோ பகுதியில் சீனாவுக்கே முழு இறையாண்மை உரிமை உள்ளதாகவும், சட்ட விரோதமாக நுழைந்த பிலிப்பின்ஸ் ரோந்து கப்பல்களைத் தடுக்கவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் சீனா பதிலளித்துள்ளது.

iii. '1982 ஐ.நா. கடல்சார் சட்டத்தின் அடிப்படையில், தென் சீனக் கடல்பகுதியில் சீனாவின் உரிமை கோரல் செல்லாது' என ஐ.நா.கடல்சார் தீர்ப்பாயம் கடந்த 2016-இல் தீர்ப்பளித்த போதிலும், முக்கிய உலகளாவிய வர்த்தகப் பாதையான அப்பகுதியை சீனா தொடர்ந்து சொந்தம் கொண்டாடி வருகிறது.

4. ரஷியாவின் தொடர் ஏவுகணைத் தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில், அமெரிக்காவின் 'ரேதியான்' நிறுவனத்துடன் இணைந்து 'பேட்ரியாட்' வான் பாதுகாப்பு ஏவுகணைகளை உக்ரைனிலேயே உற்பத்தி செய்வது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அந்நாட்டு அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.
   i. துருக்கியில் நடந்த 'நேட்டோ' கூட்டமைப்பு மாநாட்டுக்கிடையே, உக்ரைனுக்கு சொந்த பயன்பாட்டுக்காக பேட்ரியாட் ஏவுகணைகளைத் தயாரிப்பதற்கான உரிமம் வழங்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உறுதியளித்தார். இந்நிலையில், தலைநகர் கீவில் ரேதியான் நிறுவனப் பிரதிநிதிகளை ஸெலென்ஸ்கி நேரில் சந்தித்துப் பேசினார். இக்கூட்டு தயாரிப்புத் திட்டம் குறித்து இருதரப்பு அரசு மற்றும் தனியார் துறை குழுக்கள் இணைந்து செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. வங்கதேச அதிபர் முகமது ஷஹாபுதீன் (76), உடல்நலக் குறைவு காரணமாக தனது பதவியை ராஜிநாமா செய்தார்.
   i. மாணவர் போராட்டத்தின் தீவிரத்தால் பதவி விலகிய முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் நீண்டகால ஆதரவாளரான முகமது ஷஹாபுதீன், தனது பதவிக்காலம் முடிவடைய இன்னும் 2 ஆண்டுகள் மீதமுள்ள நிலையில் இம்முடிவை எடுத்துள்ளார்.

6. ராகுல் பாட்டியா - இண்டிகோவின் இணை நிறுவனரும், நிர்வாக இயக்குநர்

7. உஸ்பெகிஸ்தானில் நடைபெறவுள்ள செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
   i. நடப்பு உலக சாம்பியனான டி.குகேஷ், செஸ் உடன்பிறப்புகளான ஆர்.பிரக்ஞானந்தா, ஆர்.வைஷாலி ஆகியோர் அதில் இடம் பிடித்துள்ளனர்.
   ii. 46-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, சாமர்கண்ட் நகரில் வரும் செப்டம்பர் 16 முதல் 27 வரை நடைபெறவுள்ளது. பல்வேறு நட்சத்திர போட்டியாளர்கள் களம் காணும் இதில், 5 ஆடவர், 5 மகளிர் அடங்கிய இந்திய அணி போட்டியிடவுள்ளது.
   iii. கடந்த 2024-இல் ஹங்கேரியில் நடைபெற்ற ஒலிம்பியாட் போட்டியில் ஆடவர், மகளிர் என இரு பிரிவுகளிலுமே சாம்பியனான இந்தியா, இந்த முறை நடப்பு

சாம்பியனாக களம் காண்பது குறிப்பிடத்தக்கது.

8. இந்திய மோட்டார் விளையாட்டு கிளப்புகளின் சம்மேளனத்துக்கு (எஃப்எம்எஸ்சிஐ) இடைக்காலமாக தேசிய விளையாட்டு சம்மேளன அந்தஸ்தை மத்திய விளையாட்டு அமைச்சகம் வழங்கியிருக்கிறது.

i. ஃபார்முலா 1 (எஃப் 1) கார் பந்தயத்தை மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டு வரும் முயற்சியில், எஃப்எம்எஸ்சிஐ-யும் அரசுடன் இணைந்து செயல்பட்டு வரும் நிலையில், இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ii. இதன் மூலமாக, மத்திய விளையாட்டு அமைச்சகத்தின் நிதியுதவியை பெறுவதற்கு எஃப்எம்எஸ்சிஐ தகுதியுடையதாகிறது.

iii. இந்தியாவில் கடைசியாக 2011-13 காலகட்டத்தில் எஃப் 1 பந்தயம் நடத்தப்பட்டது. அதன் பிறகு, வரிவிதிப்பு மற்றும் நிதி ரீதியிலான விவகாரங்கள் காரணமாக இந்தியாவில் அந்தப் போட்டி நடத்தப்பட வில்லை.

iv. தற்போது 2028-இல் இந்தியாவில் எஃப் 1 கார் பந்தயத்தை நடத்த மத்திய அரசு முனைந்து வருகிறது. எஃப் 1 அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, கடந்த ஆண்டு டிசம்பரில் சுமார் 8 கோடியாக இருந்த இந்திய எஃப் 1 ரசிகர்களின் எண்ணிக்கை, கடந்த 6 மாதங்களுக்குள்ளாக 9.8 கோடியாக அதிகரித்துள்ளது.

v. மோட்டார் வாகன போட்டிகளுக்கான உலக அமைப்பான 'சர்வதேச ஆட்டோ மொபைல் சம்மேளனத்தின்' (எஃப்ஐஏ) அங்கீகாரம் பெற்றதாக இருக்கும் எஃப்எம்எஸ்சிஐ, 1971- இல் தொடங்கப்பட்டதாகும்.

9. சர்வதேச செஸ்சம் மேளனத்தின் (ஃபிடே) இடைக்காலத் தலைவராக, இந்தியரும் 5 முறை உலக சாம்பியனுமான விஸ்வநாதன் ஆனந்த் பொறுப்பேற்றுக் கொண்டார்.

i. ரஷியா உக்ரைன் போர் விவகாரம் தொடர்பாக சில தனிநபர்களுக்கு ஐரோப்பிய யூனியன் தடை விதித்துள்ள நிலையில், ஃபிடே தலைவரும், ரஷியாவை சேர்ந்தவருமான அர்கேடி வோர் கோவிச்சும் அந்தத் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

10. துராந்த் கோப்பை - கால்பந்து போட்டி

11. சீனாவில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் சைன்யம் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

12. தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலுக்கு தடங்கல் ஏற்படுத்துவது அல்லது அவமதிப்பு செய்வதை தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கும் வகையிலான சட்டத்திருத்த மசோதா மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

i. தேசிய கௌரவத்துக்கு அவமதிப்பு ஏற்படுத்துவதை தடுக்கும் சட்டத் திருத்த மசோதா 2026' என்ற பெயரிலான இந்த மசோதாவை இடதுசாரி எம்.பி.க்கள் உள்பட எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடும் எதிர்ப்புக்கு இடையே மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் அறிமுகப்படுத்தினார்.

ii. தேசிய கௌரவத்துக்கு அவமதிப்பு ஏற்படுத்துவதைத் தடுக்கும் சட்டம் 1971-இல் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது.

iii. தேசியக் கொடி, அரசமைப்புச் சட்டம், தேசிய கீதம் ஆகியவற்றுக்கு தடங்கல் ஏற்படுத்துவது அல்லது அவமதிப்பு செய்வதை தண்டனைக்குரிய குற்றமாக 1971-ஆம் ஆண்டு சட்டம் வகை செய்வதோடு, அக்குற்றத்துக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கவும் வகைசெய்கிறது.

iv. இச்சட்டத்தின் கீழ், தேசிய கீதத்துக்கு உள்ளதுபோன்றே, தேசிய பாடலான வந்தே மாதரம் பாடலுக்கும் சட்டரீதியிலான பாதுகாப்பை வழங்கும் வகையில், இந்த சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

v. முன்னதாக, நாடு முழுவதும் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் அரசு விழாக்களில் 6 சரணங்களுடன் கூடிய தேசிய பாடலான 'வந்தே மாதரம்' முழுமையாகப் பாடப்பட வேண்டும் என்று மத்திய உள் துறை அமைச்சகம் அண்மையில் உத்தரவிட்டது. அதற்கான வழிகாட்டுதலையும் வெளியிட்டது. அதன்படி, அரசு விழாக்களில் மாநில பாடல்களை முதலில் பாடலாம். அதன்பின் வந்தே மாதரம் தேசியப் பாடலும், அதையடுத்து தேசிய கீதமும் கட்டாயம் பாடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.

vi. இந்த நிலையில், வந்தே மாதரம் பாடலுக்கு தடங்கல் ஏற்படுத்துவது அல்லது அவமதிப்பு செய்வதை தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்த மசோதா, மாநிலங்களவையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

13. இந்தியாவில் மீண்டும் மீண்டும் நிகழும் சுரங்க மற்றும் சுரங்கப்பாதை விபத்துகள் குறித்த பகுப்பாய்வு - குறிப்பாக சிக்கிமில் சமீபத்தில் நிகழ்ந்த துயரச் சம்பவம் மீது கவனம் செலுத்துதல்.

i. சுரங்க விபத்துகளும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் இந்தியாவிலும் உலக அளவிலும் சாதாரணமாகிவிட்டன; இருப்பினும், இவை பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தரமான மாற்றத்தையோ அல்லது ஆறுதலையோ பெற்றுத் தருவதில் தோல்வியடைகின்றன.

ii. இந்தியாவில் சமீபத்திய விபத்துகள் (2026):

- மேகாலயா: பிப்ரவரி மாதத்தில், கிழக்கு ஜெயின்டியா ஹில்ஸ் மாவட்டத்தில் சட்டவிரோத சுரங்க வெடிவிபத்து ஒன்றில் 18 பேர் உயிரிழந்தனர்.
- கேரளா: ஜூலை மாதத்தில், வயநாட்டில் சுரங்கப்பாதை சாலைப் பணிகளின் போது ஏற்பட்ட நிலச்சரிவில் 8 பேர் உயிரிழந்தனர்.

iii. சிக்கிம் துயரச் சம்பவம் (தீஸ்தா-6 திட்டம்):

- நாம்ச்சி மாவட்டத்தில் (சாம்டோங் பகுதி) உள்ள தீஸ்தா நிலை-6 (Teesta Stage-6) நீர்மின் திட்டத்தின் சுரங்கப்பாதையில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது.
- இச்சம்பவத்தில் 25 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
- விபத்து நடந்தபோது சுரங்கப்பாதையின் பல்வேறு பகுதிகளில் இருந்த 27 தொழிலாளர்களில், இருவர் மட்டுமே உயிர் பிழைத்தனர்.
- இதில் ஈடுபட்ட தொழிலாளர்கள் முக்கியமாக மேற்கு வங்கம், உத்தரகண்ட் மற்றும் அசாம் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

iv. புவியியல் மற்றும் தொழில்நுட்ப அபாயங்கள்:

- தீஸ்தா நதி வங்காளதேசத்திற்குள் நுழைவதற்கு முன் சிக்கிம் மற்றும் மேற்கு வங்கம் வழியாக 400 கி.மீ தூரம் பாய்கிறது; இப்பாதையில் பல நீர்மின் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.
- இப்பகுதி நிலநடுக்க அபாயம் கொண்டதாகவும், இமயமலைக்கு அருகிலும் அமைந்துள்ளதால், புவியியல் ரீதியாக மிகவும் உணர்திறன் வாய்ந்ததாக உள்ளது.
- பழமையான பாறை அமைப்புகளைத் துளையிடும்போது, பெரும்பாலும் உள்ளே சிக்கியிருக்கும் மீத்தேன் வாயு வெளியேறுகிறது. இந்த வாயு ஆக்ஸிஜனுடன் கலக்கும்போது, கருவிகள் அல்லது மின் சாதனங்களிலிருந்து வரும் ஒரு சிறிய தீப்பொறி கூட கடுமையான வெடிவிபத்தை ஏற்படுத்தக்கூடும்.
- இத்தகைய வெடிவிபத்துகள் அடர்ந்த புகையையும் கார்பன்

மோனாக்சைடையும் வெளியிடுவதோடு ஆக்ஸிஜன் அளவையும் குறைக்கின்றன; இதனால் குறுகிய இடங்களில் உள்ள தொழிலாளர்கள் உடனடியாக மூச்சுத்திணறி உயிரிழக்க நேரிடுகிறது.

v. திட்டத்தின் வரலாறு மற்றும் நிர்வாகம்:

- தீஸ்தா-6 திட்டம் முதலில் ஒரு தனியார் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது, ஆனால் கட்டுமானச் செலவுகள் அதிகரித்ததால் அது கைவிடப்பட்டது.
- பின்னர் இத்திட்டம் ஒரு அரசு நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டுத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

vi. பேரிடர்களின் வரலாற்றுப் பின்னணி:

அக்டோபர் 2023-இல், தெற்கு லோனாக் ஏரி (இமயமலையில் உள்ள பனிப்பாறை ஏரி) உடைப்பெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நூற்றுக்கணக்கான மக்களை அடித்துச் சென்றது.

vii. முக்கிய வாதங்களும் எழுப்பப்பட்ட கேள்விகளும்

- 21 ஆம் நூற்றாண்டில், ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளை ஆளில்லா ஏவுகணைகள் மூலம் தாக்கவும், அறுவை சிகிச்சைகளை ரோபோக்கள் மூலம் செய்யவும் தொழில்நுட்பம் வழிவகுத்துள்ளது. அப்படியிருக்க, தொழிலாளர்களை அபாயகரமான சுரங்கங்களுக்குள் அனுப்புவதற்கு முன்பு, மீத்தேன் வாயுவைக் கண்டறிந்து அகற்றுவதற்கான தொழில்நுட்பம் ஏன் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை?
- வளர்ச்சித் திட்டங்கள் அவசியமானவை என்றாலும், அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே அரசாங்கத்தின் முதன்மையான கடமையாகும்.
- "நவீன இந்தியாவை" உருவாக்குவதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் ஏழைத் தொழிலாளர்கள், பெரும்பாலும் அடையாளம் காணப்படாமலும், மறக்கப்பட்டும், அங்கீகாரம் இன்றிப் புதைக்கப்பட்டும் விடப்படுகின்றனர்.